# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை 02.12.2025 கதிர் 024


**இனி இது ரகசியம் அல்ல!**

'தித்வா' உருவாக்கிவிட்டுப் போன மனிதப்பேரவலங்கள் இப்போதுதான் மெல்ல மெல்ல வெளியே வரத் தொடங்குகின்றன. இது நாள் வரையில் வெள்ளம், புயல் ☞ 2

# பேரிடரை எதிர்கொள்ளத் தவறிய ஆளும்தரப்புக்கு எதிராக வழக்கு

## ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை

நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கியமைக்காக ராஜபக்சக்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோன்று நாட்டில் தற்போது நிலவும் இடர்நிலைமை தொடர்பாக ஆளும்தரப்பிற்கு எதிராகக் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளோம். இந்த இடர் நிலைமை 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைப் போலவே மிகவும் கொடுமையான சம்பவமாகும் என ஐக்கிய மக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கியமைக்காக ராஜபக்சக்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதைப் போலவே, தற்போதைய ஆளும்தரப்புக்கு எதிராக ஒரு குற்றவியல் வழக்கைதாக்கல்செய்ய எதிர்பார்க்கிறோம். கொழும்பில் உள்ள வணிக சமூகத்தின் பேச்சைக் கேட்கும் ஒரு கைப்பாவை இளவரசரே அரசுத் தலைவராக உள்ளார். நாடாளுமன்றம்கூடியபோது, நாட்டில் ☞ 2

# இலங்கையை மீட்டெடுக்க அரசு – தனியார் கூட்டு நிதி

## திட்டத்தை அறிவித்தார் அநுர

இலங்கையைப் பேரிடரிலிருந்து மீட்டெடுக்க அரசு தனியார் கூட்டு முயற்சியில் 'இலங்கையை உருவாக்குவோம்' என்ற நிதியம் ஆரம்பிக்கப்பட உள்ளது என அரசுத் தலைவர் அநுரகுமார அறிவித்துள்ளார்.

தற்போதைய இடர் நிலைமை குறித்து மாகாண ஆளுநர்கள் மற்றும் செயலாளர்களுடன் இணையவழி ஊடாக நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அரசுத் தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிரிழப்புக்கள்மேலும்அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படவேண்டும். அவற்றினை முறையாக வழங்குவதே தற்போது பெரும் சவாலாக உள்ளது. அதனையடுத்து நாம் எதிர்கொள்ளவுள்ள பெரும் சவால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மீள்கட்டியெழுப்புவதாகும்.

குறிப்பாக சேதமடைந்துள்ள பிரதான வீதிகள், பாலங்கள், கிராமிய வீதிகள் என்பவை துரிதமாக மீள் நிர்மாணிக்கப்படவேண்டும். மாகாண சபை, பிரதேச சபை மட்டத்தில் அதற்கான தகவல்களைக் ☞ 2

# இறந்த 5 கடற்படையினரையும் தேடும் பணிகள் தொடர்கின்றன

முல்லைத்தீவு சுண்டிக்குளம் களப்பு பகுதியில் முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது காணாமல் போன 5 கடற்படை சிப்பாய்களையும் தேடும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு சுண்டிக்குளம் சாலை களப்பு பகுதியில் வெள்ளநீர்வழிந்தோட இடமின்றி அடைப்பட்டுகிடந்தமையால் முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணிக்காக கடற்படையின் 5 சிப்பாய்கள் கொண்ட குழுவொன்று அப்பகுதிக்கு பயணித்திருந்தது. கடற்படைக் குழுவினரின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் ஐவரையும் தேடும் பணிக்காக கடற்படையால் ஞாயிற்றுக்கிழமை தனிக் குழுவொன்று அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், நேற்றிரவு வரை காணாமல்போனவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டோ புத்திக சம்பத் தெரிவித்தார்.

# இடரிலிருந்து மீண்டெழுத் தேவையான அனைத்து உதவிகளையும் தருவோம்

## இந்தியப் பிரதமர் மோடி தொலைபேசியில் அநுரவிடம் உறுதி

இலங்கை இயற்கைப் பேரிடரிலிருந்து மீண்டெழுவதற்கு எடுக்கும் நடவட்டிக்கைகளில்இந்தியாதேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்தும் வழங்கும் என்று அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடி, அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் உறுதியளித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிநேற்று அரசுத்தலைவர் அநுரகுமாரவுடன் தொலைபேசியில் உரையாடிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

'தித்வா' சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட உயிர் இழப்புகள் மற்றும்பரவலான பேரழிவுக்கு பிரதமர் மோடி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். இந்தியா முக்கியமான நேரத்தில் இலங்கை மக்களுடன் உறுதியான ஒற்றுமையுடனும் ஆதரவுடனும் நிற்பதற்கு அநுரகுமார நன்றியைத் தெரிவித்துள்ளார்.

மீட்புக் குழுக்கள் மற்றும் நிவாரணப் பொருட்கள்விரைவாகஅனுப்பப்பட்டமைக்கும், இந்தியாசரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள மீட்பு முயற்சிகளை வழங்கியதற்காகவும் இலங்கை மக்களின் சார்பில் அவர் மீண்டும் நன்றியைத் தெரிவித்தார்.

பேரிடரில் சிக்கிய மக்களுக்கு 'சாகர் பந்து' திட்டத்தின் கீழ் இந்தியா தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து வழங்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

இலங்கை மறுவாழ்வு முயற்சிகளை மேற்கொண்டு, பொதுச் சேவைகளை மீண்டும் தொடங்கி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் பணிகளில் ஈடுபடும்போது, இந்தியா, தனது மகசாகர் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்பவும், முதல் பதிலளிப்பவர் என்ற தனது நிலைப்பாட்டிற்கு ஏற்பவும், வரும்நாட்களில்தேவையான ☞ 2

# சீனா 1 மில். டொலர் நிதி உதவி

இலங்கைமக்களுக்கான உதவி உதவி முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் சீன அரசினால் ஒரு மில்லியன் டொலர் நிதியுதவியும், 10 மில்லியன் ஆர்.எம்.பி. பெறுமதியான உதவிப்பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை சீன செஞ்சிலுவைச் சங்கத்தினால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு 100,000 டொலர் உடனடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

'தித்வா'சூறாவளியினால்ஏற்பட்ட வெள்ளப்பெருக்குமற்றும் மண்சரிவினால்இலங்கைபேரழிவுக்குமுகங்கொடுத்திருக்கும் நிலையில், இலங்கையுடனான உடன்நிற்பு மற்றும் உதவி வழங்கல் தொடர்பில் இலங்கையிலுள்ள சீனத்தூதரகத்தினால்வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சிலதினங்களுக்குமுன்னர் இலங்கையில் 'தித்வா' சூறாவளியின் விளைவாக ஏற்பட்ட மிகமோசமான வெள்ளப்பெருக்கு ☞ 2

# அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் 'தித்வா' பாதிப்பு பற்றி ஆராய அழைப்பு

## ரணில் விக்கிரமசிங்க விடுத்தார்

'தித்வா' சூறாவளியால் இலங்கையில் ஏற்பட்ட அதிதீவிர மோசமான நிலைமை குறித்து எடுக்கப்படவேண்டியநடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக முன்னாள் அரசுத் தலைவரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்தின்படி, அனைத்துக் கட்சித் தலைவர்களும் கொழும்பில் உள்ள பிளவர் வீதி அரசியல் அலுவலகத்தில் நாளை புதன்கிழமை கூடவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இது தொடர்பில் குறிப்பிடுகையில், ஒரு கடுமையான இயற்கை இடரை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் வெற்றிகரமாக எதிர்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில், எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

2003 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவின் போதும், வெள்ளத்திற்குப் பிந்தைய காலப்பகுதியிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர்களுக்கு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளிக்கவுள்ளார்.

இந்தக் கடுமையான பேரழிவிற்குப் பிறகு, நாடாளுமன்றத்திலும் வெளியேயும் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் ஒரே இடத்தில் அழைப்பது இதுவே முதலாவது சந்தர்ப்பமாகும் என்றாகும்.

# நாணய நிதியமும் உதவத் தயார்

மிகமோசமான வெள்ளப்பெருக்கினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பில் கவலையை வெளிப்படுத்தியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா, இலங்கையின் மீட்சிக்கும் மீளெழுச்சிக்கும் அவசியமான ஆதரவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

'தித்வா'சூறாவளியினால்ஏற்பட்டவெள்ளப்பெருக்குமற்றும் மண்சரிவினால் இலங்கை மிகமோசமான பேரழிவுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இலங்கையுடனான உடன்நிற்பை வெளிப்படுத்திவரும் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புக்கள், இலங்கைக்கு உதவி உதவிகளையும் வழங்கி வருகின்றன.

அதற்கமைய இலங்கை உள்ளடங்கலாக பாரிய இடர்த்துக்கு முகங்கொடுத்திருக்கும் நாடுகள் தொடர்பில் கவலையை வெளிப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர்கிறிஸ்டலினாஜோர்ஜியேவா ☞ 2

# காவு எண்ணிக்கை 390

'தித்வா' புயல் ஏற்படுத்தி பேரிடர்களால் உயிரிழந்தோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. மண்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று மாலை வரை 390 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 350 பேர் காணாமல் போயுள்ளனர். இதேவேளை 25 மாவட்டங்களிலும் 3 லட்சத்து 82 ஆயிரத்து 651 குடும்பங்களைச் சேர்ந்த 13 லட்சத்து 73 ஆயிரத்து 899 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 57 ஆயிரத்து 590 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 4 ஆயிரத்து 597 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

**மலையகத்தில் அதிக உயிரிழப்புக்கள்**

மண்சரிவுமற்றும்வெள்ளம்காரணமாகமலையகத்திலேயே அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. கண்டியில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆகியவற்றில் சிக்கிக் கொண்டவர்களை மீட்கும் நடவடிக்கைகளும் இறந்தவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் புள்ளிவிவரங்களும்தான் பெரியளவில் வெளியாகின. இப்போதுதான் பாதிக்கப்பட்டவர்களின் அவலங்கள் மெல்ல மெல்ல வெளியே வருகின்றன.

மண்சரிவுகளால்உயிரிழப்புக்கள்நிகழ்ந்த பல இடங்களை வெளி இடங்களிலிருந்து அணுகமுடியாதநிலையில்அங்குபாதிக்கப்பட்ட மக்கள்தவித்துப்போயுள்ளனர். ஒருபுறம்மண் சரிவுகளுக்குள்சிக்கிக்கொண்டுள்ளவர்களைத் தேடும் பணிகளைத் தொடரவேண்டிய நிலையில் மீட்கப்படும் இறந்தவர்களுக்கு இறுதிச் சடங்குகளையும் செய்ய வேண்டிய நிலையில் மக்கள் இருக்கின்றனர்.

இறந்தவர்களுக்கானஇறுதிச்சடங்குகளைச் செய்வதற்கு மதகுருக்களைப் பிடிப்பது இப்போது குதிரைக் கொம்பாக இருக்கிறது. வெளியிடங்களிலிருந்தும் அவர்களை வரவழைக்க முடியாத நிலையில். மக்கள் தாமே எளிமையான இறுதிச் சடங்குகளை முடித்துக்கொண்டு இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு அல்லது எரிப்பதற்கானநிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்திலுள்ள, உடபலாதா பிரதேசசெயலர்பிரிவிலுள்ளஇஹலகாமாவின் மாவத்துரபகுதிஇதற்கொருஉதாரணம். இங்கு நிலச்சரிவு ஏற்பட்டது. அந்தக் கிராமத்திலிருந்த கிட்டத்தட்ட 40 பேர் வரையிலானோர் நிலச்சரிவில சிக்கிக் கொண்டிருக்கலாம் என்று கிராமவாசிகள் கூறுகின்றனர்.

புதையுண்டவர்களில் 15 பேரின் உடல்கள் இதுவரையில்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் 25 பேரை இன்னும் காணவில்லை என்று கிராமத்தவர்கள் கூறுகிறார்கள்.

இங்குள்ளசிங்களமக்கள்இறந்தவர்களின் உடல்களுக்கு இறுதிச் சடங்கு செய்வதற்குத் துறவிகள்கிடைக்காததால்அவற்றைசடங்குகள் இன்றித் தாமே அடக்கம் செய்யும் அவலம் நடப்பதாக கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண் அருணி தெரிவிக்கிறார்.

'மதச்சடங்குகளைச்செய்யஒருதுறவியைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது' என்கிறார் அவர். நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காணாமல்போனவர்களை தேடி வருவதால் இறந்தவர்களின் குடும்பத்தினர் அல்லது நெருங்கிய உறவினர்களுடன் அவசரமாகச் சடங்குகளை முடித்து அடக்கம் செய்யவேண்டியிருப்பதுஆழ்ந்ததுயரத்தையும் மனநெருக்கீட்டையும் ஏற்படுத்துகின்றது என்று அருணி தெரிவிக்கிறார்.

கிட்டத்தட்ட 600 பேர் இந்தக் கிராமத்தில் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் அப்பகுதியில் உள்ளஒருபாடசாலைமற்றும்கன்னியாஸ்திரி இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான அடிப்படை வசதிகள்கூட இன்னும் கிடைக்கவில்லை என்று அருணி கூறுகிறார்.

ஆளும்தரப்பும் அரசியல் தலைவர்களும் வழக்கம்போல் வீரவசனங்களைக் குறைவில்லாமல்அள்ளிவீசுகிறார்கள். தாங்கள் எல்லாவற்றையும் வென்றெடுத்துவிடுவோம் என்று மார் தட்டுகிறார்கள். ஆனால் வழக்கம்போலவே அத்தனை துயரையும் துன்பத்தையும் சுமப்பவர்களாக மக்கள் மட்டுமே இருக்கின்றனர். அது போராக இருந்தாலும் சரி இயற்கைப் பேரிடராக இருந்தாலும் சரி.

.....................................................

தங்கத்தின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. ஆபரணத் தங்கத்தின் விலை, அதாவது 22 கரட் தங்கத்தின் விலை நேற்றைய கொழும்புச் சந்தை நிலவரப்படி 3 லட்சத்துப் 15 ஆயிரம் ரூபாய். கடந்த ஐந்து நாள்களில் மட்டும் தங்கத்தின் விலை 6 ஆயிரம் ரூபாய் அதிகரித்துள்ளதாக கொழும்பு செட்டித் தெரு தங்க வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

நவம்பர் 25 முதல் தொடங்கிய விலை அதிகரிப்பில் நேற்று மட்டும் 2 ஆயிரம் ரூபாய் எகிறியுள்ளது. 24 கரட் தங்கத்தின் விலை தற்போது 3 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய். ஒரு வாரத்திற்கு முன்னர் 3 லட்சத்து 35 ஆயிரம் ரூபாயாக இருந்தது.

தங்கத்தின் இந்த விலை அதிகரிப்பிற்கும் இலங்கையில் நிகழ்ந்த இயற்கைப் பேரிடரிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. உலக சந்தையில் தங்கத்தின் வலை அதிகரித்ததே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் ஒரு பவுண் தங்கத்தின் விலை 4 ஆயிரத்து 238 டொலராக அதிகரித்துள்ளதாம். போகிற போக்கில் தங்கம் நடத்தர மக்களே தாலியில் மட்டும்தான் போட்டுக்கொள்ளும் ஆபரணமாக மாறிவிடும் போலுள்ளது. மாற்று நகை உற்பத்தியாளர்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## பேரிடர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ள இடர் நிலைமை குறித்து விவாதிக்கப் போதுமான கால அவகாசத்தை நாங்கள் கோரியபோதும், ஆளும்தரப்பு தன்னிச்சையாக எதிர்க்கட்சிக்கு அந்த வாய்ப்பை மறுத்துவிட்டது.

ஏனெனில் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள இந்த நிலமையில் இருந்து நாட்டை மீட்கத் தேவையான வெற்றிகரமான திட்டங்களை அவர்களால் செயல்படுத்த முடியவில்லை. குறிப்பாக, நவம்பர் 12 முதல் 'தித்வா' புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால்ஆளும்தரப்புஅதனைஎதிர்கொள்ளத் தயாராகவில்லை.

பொதுவாக பெரிய நீர்த்தேக்கங்கள் மூன்று பணிகளைச் செய்கின்றன: ஒன்று, உற்பத்தி, இரண்டு, விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரை வழங்குதல்; அத்துடன் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல் என்பனவே அந்தப் பணிகள். எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி, தண்ணீரை படிப்படியாக வெளியேற்றவேண்டும் என்று பொறியியலாளர்கள் அறிவித்திருந்தனர்.

அந்த அறிவுரையைப் புறக்கணித்து, மீண்டும் ஒருமுறை தங்கள் கர்வம் மற்றும் முட்டாள்தனத்தைக் காண்பித்து, அப் பணிகளைச் செய்யாமல், ஒரேயடியாக வான் கதவுகளைத் திறந்துவிட்டதாலேயே இந்த மாபெரும் குற்றம் நடந்துள்ளது. குறிப்பாக, களனி கங்கையைச் சுற்றிப் பார்க்கும்போது, ஆற்று முகத்துவாரத்தை அகலப்படுத்தும் வேலைகளைச் செய்திருக்கவேண்டும். அதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல்முறைமையில்மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறி தற்போது நாட்டையே குழப்பி வைத்திருக்கின்றனர் - என்றார்.

## சீனா 1 மில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மண்சரிவு என்பவற்றால் பலர் உயிரிழந்திருப்பதுடன் பெருமளவான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. இந்தப் பேரிடரின் விளைவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் துயரத்தில் நாம் பங்கெடுத்துக்கொள்கிறோம்.

இவ்வேளையில்இலங்கைமக்களுக்கான உதவி உதவி முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் சீன செஞ்சிலுவை சங்கத்தினால் இலங்கை செஞ்சிலுவை சங்கத்துக்கு 100,000 டொலர் உடனடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையிலுள்ள வெளிநாட்டு சீன சங்கத்துடன் இணைந்து சீன வர்த்தக சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்ட நன்கொடை சேகரிப்பு முயற்சியின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவக்கூடிய வகையில் 10 மில்லியன் ரூபா நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைவர் அநுரகுமார உறுதியான தலைமைத்துவத்தின்கீழ், சர்வதேச சமூகத்தின் கூட்டிணைந்த உதவிகள் மூலம் இந்தப் பேரிடரிலிருந்து இலங்கை மக்கள் மீண்டெழுவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எதிவருங்காலங்களில் அம்மக்கள் தமது வீடுகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

88 பேர் உயிரிழந்துள்ளதோடு 150 பேர் காணாமல் போயுள்ளனர். நுவரெலியாவில் 75 பேர் உயிரிழந்துள்ளதோடு 62 பேர் காணாமல் போயுள்ளனர். பதுளையில் 82 பேர் உயிரிழந்துள்ளதுடன் 48 பேர் காணாமல் போயுள்ளனர். இவை தவிர குருணாகலில் 52 பேர் உயிரிந்துள்ளதோடு 27 பேர் காணாமல் போயுள்ளனர். மாத்தளையில் 24 பேர் உயிரிழந்துள்ளதோடு 6 பேர் காணாமல் போயுள்ளனர். கேகாலையில் 22 பேர் உயிரிழந்துள்ளதோடு 48 பேர் காணாமல் போயுள்ளனர்.

### நீர் நிலைகளின் நிலவரம்

களனி கங்கை, மல்வத்து ஓயா, களு கங்கை, மகாவலி கங்கை என்பவற்றுக்கு விடுக்கப்பட்டுள்ள வெள்ள எச்சரிக்கை நேற்று மாலை 6 மணியிலிருந்து எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே இந்த ஆறுகளை அண்மித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் மறுஅறிவித்தல்வரைதமதுஇருப்பிடங்களுக்கு திரும்ப வேண்டாம் என்றும், அங்கிருந்த வெளியேறாதவர்கள்மிகுந்தஅவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### காலநிலை

வடக்கு, மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும்கண்டிமற்றும்நுவரெலியா மாவட்டங்களிலும்மழைபெய்யக்கூடும். ஊவா, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை பெய்யக் கூடும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தித்வா புயலானது நேற்று திங்கட்கிழமை மாலை காங்கேசன்துறையிலிருந்து 340 கிலோமீற்றர் வடக்கு திசையில் நிலைகொண்டிருந்தது. மீன்பிடி மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு விடுக்கப்பட்டிருந்த எச்சரிக்கை நீக்கப்பட்டுள்ளது.

### மண்சரிவு அபாய எச்சரிக்கை

பல மாவட்டங்களில் சுமார் 70க்கும் மேற்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ளமண்சரிவுஅபாயஎச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. அதற்கமைய பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ளமண்சரிவுஅபாயஎச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

### திறக்கப்பட்டுள்ள வான் கதவுகள்

பெரும்பாலான நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் தொடர்ந்தும் திறக்கப்பட்டுள்ளன. அநுராதபுரத்தில் இராஜாங்கனை, அங்கமுவ, கலா வெவ நீர்த்தேக்கங்களில் 18 வான்கதவுகளும், குருணாகலில் தெதுருஓயா நீர்த்தேக்கத்தில் 8 வான் கதவுகளும், கண்டி - பொல்கொல்ல நீர்த்தேக்கத்தில் 3 வான் கதவுகளும், மொனராகலை - வெஹெரகல நீர்த்தேக்கத்தில் 6 வான் கதவுகளும், மாத்தளை - போவதென்ன நீர்த்தேக்கத்தில் 6 வான் கதவுகளும், கண்டி - ரன்தெம்பே நீர்த்தேக்கத்தில் 2 வான் கதவுகளும், பதுளை - உல்ஹிட்டிய நீர்த்தேக்கத்தில் 7 வான் கதவுகளும், களுத்துறை - குகுலேகல நீர்த்தேக்கத்தில் வான் கதவொன்றும், அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்தில் 6 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

### சேதங்கள்

இந்தப் பேரிடரினால் 432 வீடுகள் முற்றாக அழிந்துபோயுள்ளன. 15 ஆயிரத்து 688 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று பேரிடர் முகாமை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. பதுளை, கேகாலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. பதுளையில் 226 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 3 ஆயிரத்து 58 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கேகாலையில் 24 வீடுகள் முழுமையாகவும் 2 ஆயிரத்து 949 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. கொழும்பில் 6 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 426 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. குருநாகலயில் 71 வீடுகள் முழுமையாகவும் 699 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. மொனராகலையில் 23 வீடுகள் முழுமையாகவும் 420 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. நுவரெலியாவில் 15 வீடுகள் முழுமையாகவும் 453 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

## இடரிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து உதவிகளையும் தொடர்ந்து வழங்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

'மிகமோசமான வெள்ளப்பெருக்கினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் மக்கள் தொடர்பில் மிகுந்த கரிசனை அடைகிறோம்' என அவர் அப்பதிவில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இவ்வனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அதேவேளை, இந்நாடுகளின் மீட்சிக்கும், மீளெழுச்சிக்கும் அவசியமான ஆதரவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோருகின்றோம். மேலும் செயலிழந்துள்ள தொலை தொடர்புகள், மின்விநியோகம், நீர் விநியோகம் உள்ளிட்டவற்றையும் வெகுவிரைவில் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பேரழிவின் பின்னர் அனைவரையும் மீளக் கட்டியெழும்பி இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு செல்வது இலகுவானதல்ல. எனவே அதற்கான வேலைத்திட்டங்களை மிகுந்த பலத்துடன் முன்னெடுக்கவேண்டும். அதற்காகவே அவசர நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தனியார் கூட்டு முயற்சியில் 'இலங்கையை உருவாக்குவோம்' என்ற நிதியம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

காரணம் நாம் இந்த அழிவிலிருந்து மீள்வதற்கு எமக்குப் பெரும் நிதி உதவி தேவைப்படுகின்றது. பொருளாதாரம் மீண்டெழுந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்டுள்ள இந்த பேரழிவால் மீண்டும் பழையநிலைமைக்குச்செல்வதற்குஇடமளிக்க முடியாது. எனவே நிதி உதவிகளை பெறுவது அத்தியாவசியமானதாகும். அதற்கான புதிய சட்டம்ஒன்றைநிறைவேற்றுவதுதொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. விவசாயம் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்த வேண்டி உள்ளது.

அது மாத்திரமின்றி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மீண்டும் கட்டியெழுப்பப்படவேண்டும். இவ்வாறு படிப்படியாகப் பொருளாதார மீள் எழுச்சிக்கான வேலை திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும். பேரலவங்களால் தமது குடியிருப்புகள் உடைமைகள் அனைத்தையும் இழந்த மக்களை தொடர்ந்தும் பராமரிக்கவும், அவர்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் நடவடிக்கை எடுப்பது அத்தியாவசியமாகும்.

மாவட்ட ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான அறிக்கையையும் அதற்கான செலவு அறிக்கையையும் விரைவில் என்னிடம் சமர்ப்பிக்குமாறு மாவட்டச் செயலர்களிடம் கேட்டுள்ளேன். ஜனவரி மாதத்தின் பின்னரே வரவு செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எனவே அதற்கு முன்னர் இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள முடியும். எந்தக் காரணத்துக்காகவும் இந்த திட்டங்கள் ஒருபோதும் கைவிடப்பட மாட்டாது.

அரச நிறுவனங்களால் மாத்திரம் தனித்து இதனை எதிர்கொள்ள முடியாது. எனவே அரசு சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், வர்த்தக சமூகம் உள்ளிட்ட பலரிடமிருந்து இதற்கான ஒத்துழைப்புகளைக் கோர எதிர்பார்த்துள்ளோம். தற்போது மாகாண சபைகள் செயலிழந்து உள்ளதால் மாகாண ஆளுநர்கள் மற்றும் செயலாளர்களே எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மிகச் சரியான திட்டமிடல் தேவை

இலங்கையின் மீது புரண்டுசென்ற தித்வா சூறாவளி பல குடும்பங்களின் வாழ்வையும் எதிர்காலத்தையும் சீரழித்துள்ளது. வெள்ளம் வீடுகளை விழுங்கிக்கொண்டது. மண் சரிவு மலைச் சரிவுகளை விழுங்கியது. தொழிற்சாலைகள், சிறு கடைகள், விவசாய நிலங்கள் அனைத்தும் கண நேரத்தில் அழிந்தன. மனித உயிரிழப்புகள், காயம், இடம்பெயர்வு இவை எல்லாம் சேர்ந்து இலங்கை நீண்ட காலம் சமாளிக்க வேண்டிய வலியை உருவாக்கியுள்ளன.

இன்று நாடு எதிர்கொள்கிற மிகப் பெரிய சவால் மீளமைப்பு. உடைந்த பாலங்களை, வீடுகளை, சாலைகளை, கடைகளை மீண்டும் கட்டுவது. ஆனால் உண்மையான மீட்பு என்பது சுவர்களையும் கூரைகளையும் மீண்டும் எழுப்புவதால் மட்டும் முடிவடையக்கூடாது. சமுதாயங்கள் எவ்வாறு பாதுகாப்பாக வாழ முடியும், எவ்வாறு ஆபத்துகளை முன்கூட்டியே உணர்ந்து தவிர்க்க முடியும் என்கிற திறன்களை வளர்க்காத வரை புதிதாக எழுப்பப்படும் கட்டடங்களும் மீண்டும் ஒரு நாளில் சிதறும் அபாயம் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

### ஏன் மக்கள் அகலவில்லை?

'தித்வா' புயலுக்குப் பிந்தைய அறிக்கைகள் கவலைக்குரிய உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. ஆபத்தான பகுதிகள், நிலச்சரிவுகள், வெள்ளம் மிகுதியாகச் சேரும் தாழ் நிலப் பகுதிகள் ஆகியவற்றைப் பற்றி அதிகாரிகள் தொடர்ந்து எச்சரித்திருந்தும், பலரும் அவற்றைக் கவனத்தில் எடுக்கவில்லை என்று தெரிகிறது. ஒருசில இடங்களில் மக்கள் எச்சரிக்கையை புறக்கணித்தனர் என்கிற குற்றச்சாட்டுகளும் உள்ளன. சில பகுதிகளில், மக்கள் தாங்கள் இருக்கின்ற நிலத்தின் ஆபத்தைக் குறித்து முழுமையான புரிதலே இல்லாமல் இருந்ததும் தெளிவாகிறது.

சமூக ஊடகங்களில் பல பதிவுகள், 'போக இடமில்லாததால் வீட்டை விட்டுச் செல்ல முடியவில்லை' எனக் கூறும் குடும்பங்களின் துயரத்தைப் பதிவுசெய்தன. சிலருக்கு இது அலட்சியம் அல்ல, ஆபத்துக்குள் தொடர்ந்தும் தங்கியிருப்பது அவசியமாகியது. பாதுகாப்பற்ற இடத்திலிருந்து விலகுவதற்கு வழி இல்லாதிருந்ததே அதற்குக் காரணம்.

மேலும் வேதனைக்குரியது, அழிந்துபோன வீடுகளில் பலவும் முந்தைய மண் சரிவுகளுக்குப் புகழ்பெற்ற பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்ததாக வரும் தகவல்கள். அப்படியானால் இது தனிநபர் தவறாக மட்டுமல்ல; பாதுகாப்பு விதிகளின் நடைமுறை பலவீனத்தையும் குறிக்கிறது.

### சரியான திட்டமிடலின் இல்லாமை

ஒவ்வொரு புயலுக்கும் முன்பும் 'அகலுங்கள், கவனமாக இருங்கள்' என்று அறிவிப்பது மட்டும் போதாது என்பதையே தற்போதைய நிலமைகள் காட்டுகின்றன. ஆபத்தான இடங்கள் எவை? அங்கு வாழ்வதால் ஏற்படும் உண்மையான அபாயம் என்ன?

### எந்தக் கட்டட அமைப்பு பாதுகாப்பானது?

எந்த நிலையில் நிலம் சரிவடையும்? என்கிற அறிவு மக்கள் இதயத்திற்குள் சென்று பதிய வேண்டியது அவசியம். இது ஒரு நாள் அல்லது ஒரு வாரத்தில் நடக்கக்கூடிய செயல்பாடு அல்ல. இது அரசு, நிபுணர்கள், உள்ளூர் சமூகங்கள் என அனைத்துத் தரப்புக்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நீண்டகால முயற்சி.

ஏன் மக்கள் பாதுகாப்பற்ற இடங்களில் தங்கிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் சிக்கிறார்கள்? இது ஒரு சாதாரண கேள்வி அல்ல. வறுமை, நிலத்தட்டுப்பாடு, தலைமுறை சந்ததியால் பெற்ற சொத்து, வேறு வசிப்பிடத்தின் இல்லாமை போன்றவை பலருக்கு மாற்றுத் தீர்வுகளை மறுக்கின்றன.

சிலர் இடம்பெயர விரும்பினாலும், அதற்கான பொருளாதார திறன் இல்லை.

சிலர் அரசின் இடம்பெயர்வுத் திட்டங்களை நம்பவில்லை. முன்பு கொழும்பில் சில குடும்பங்கள் குடியிருப்புகளுக்கு மாற்றப்பட்டபோது ஏற்பட்ட குறைபாடுகள், சீரற்ற வசதிகள், நிச்சயமின்மை ஆகியவை மக்கள் மனதில் இன்னும் பதிந்துகிடக்கின்றன. எனவே விழிப்புணர்வு மட்டும் தீர்வு அல்ல. அரசு பாதுகாப்பான குடியேற்றப் பகுதிகள், நிதி உதவி, வெளிப்படையான இடம்பெயர்வு நடைமுறைகள் என்று வழிகளை அமைக்க வேண்டும்.

### விழிப்புணர்வின் மொழி மாற வேண்டும்

இன்றைய விழிப்புணர்வு முயற்சிகள் பெரும்பாலும் தொழில்நுட்ப மொழியில் பேசுகின்றன. நிலச்சரிவு என்றால் என்ன? மண் ஈரப்பதம் எவ்வாறு ஆபத்தாகிறது? கல்லிடுக்குப் பகுதிகளில் கட்டடம் அமைக்கும் அபாயம் என்ன? என்று அவை பேசும் விதம் மக்களுக்குப் புரியும்விதமாக இல்லை. அவை உண்மை அனுபவங்களின் மொழியில் விளக்கப்படவேண்டும். ஒவ்வொரு எச்சரிக்கையும் 'ஏன் இது ஆபத்து?' என்பதைக் காட்டும் வாழ்க்கை சம்பவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

இதுவொரு நீண்ட பயணம். ஆனால் இது அவசியமான பயணம். பேரிடரின் செலவு அதிகம். ஒப்பிடுகையில் தடுப்பு நடவடிக்கையின் செலவு குறைவு. ஒரு குடும்பம் ஆபத்தான இடத்திலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்படும்போது, ஒரு பேரிடருக்கான அரசின் செலவில் கோடிக்கணக்கான ரூபாய்கள் மிச்சமாகின்றன.

ஒரு சமூகத்திற்கு ஆபத்தினை உணர்த்துவதால், பல உயிர்கள் காக்கப்படுகின்றன.

அரசு துறைகள் ஏற்கனவே மிகுந்த அழுத்தத்தில் உள்ளன. அந்த அழுத்தத்தை குறைப்பதற்கான மிகச் சிறந்த வழி, பேரிடர் முன்னேற்பாட்டு நடவடிக்கைத் திட்டத்தை உரிய வகையில் செயற்படுத்துதலே!

### இதே நிலை மீண்டும் வரக்கூடாது

'தித்வா' எங்களுக்குக் கொடுத்த பாடம் கொடுமையானது.
நாடு மீண்டும் கட்டப்படுவதைவிட முக்கியமானது,
நாடு புத்திசாலித்தனமாகக் கட்டப்படவேண்டும் என்பதுதான்.
அடுத்த புயல் வந்தபோது, மக்கள் அதே ஆபத்தில் இருக்கக்கூடாது.
அதேதவறுகள்மீண்டும்நிகழக்கூடாது. மீளமைப்புஇப்போதுதொடங்குகின்றது. ஆனால் பாதுகாப்பான இலங்கை உருவாகுவது நாளைய திட்டமிடலில்தான்.

# ட்ரோன்களை பறக்கவிடாதீர்கள் விமானப் படை அறிவுறுத்து

பேரிடரில் சிக்கிய மக்களை மீட்கும் பணி மற்றும் உதவி வழங்கும் பணிகள் ஹெலிகொப்டர்களை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருவதால், வான் பரப்பில் ட்ரோன்களைப் பறக்க விடுவதை தவிர்க்குமாறு இலங்கை விமானப்படை வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் தற்போது நிலவிவரும் அவசர கால நிலையால் பல பகுதிகளுக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. விசேடமாக வெள்ளம், மண்சரிவு , வீதிகளில் வெடிப்பு, நிலம் தாழ் இரங்கல் காரணமாக அதிகமான பகுதிகளில் தரைவழி போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது. இந்நிலையில் மீட்புக் குழுவினர் நடந்தும் ஹெலிகொப்டர்கள் மூலம் அப்பகுதிகளை சென்றடைந்துள்ளனர். அதேபோல் இலங்கை வான் பரப்பினூடாக ஹெலிக்கொப்டர்கள் மூலம் பேரிடரில் சிக்கியுள்ளவர்களை மீட்கப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிங்களும் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

ஒரு சில தண்னார்வ தொண்டர்களும் ட்ரோன்களின் உதவியுடன் மக்களுக்கு தம்மால் முடிந்த உதவிங்களை வழங்கி வருகின்றனர். வான்பரப்பில் ஹெலிகொப்டர்கள் சஞ்சரிக்கும் நேரத்தில் ட்ரோன்களைப் பறக்க விடுவதால் விபத்துக்கள் நேரும் அபாயம் உள்ளது. இந்த இக்கட்டான நேரத்தில் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள், அவர்களை சென்றடைவதற்கு விமானப் படைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்.

ஆகையால் உதவி நடவடிக்கைகளில் விமானங்கள் ஈடுபட்டுள்ள பகுதிகளில் ட்ரோன்களை இயக்குவதைத் தவிர்க்கவும். மேலும் ட்ரோன்களை இயக்குவதற்கு முன்னர் அவை புறப்படும் மற்றும் தரையிறங்கும் நேரத்தை 115 துரித தொலைபேசி இலக்கம் மற்றும் 0112343970 , 0112343971 ஆகிய எண்களை தொடர்புக் கொண்டு அறிவிக்குமாறு இலங்கை விமானப்படை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# இலங்கையை மீளக்கட்டியெழுப்ப உலக நாடுகள் உதவ வேண்டும்

## சஜித் பிரேமதாச வேண்டுகோள்

நாட்டில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட இயற்கை இடர்கள் பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வெளிநாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று திங்கட்கிழமை அவர் ஜப்பான், கொரியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்களை சந்தித்து இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஜப்பானிய தூதுவர் அகியோ இசமோட்டாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதேவேளை கொரிய தூதுவர் மியான் லீக்குடனான சந்திப்பும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் காமென் மொரெனோவுடனான சந்திப்பும்கூட கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றன.

இந்தச் சந்திப்புக்களின்போது தற்போது இலங்கை எதிர்கொள்ளும் பேரிடர் நிலைமை குறித்து இரு தரப்பினரும் நீண்ட கருத்துக்களை இங்கு பரிமாறிக் கொண்டனர். சிறப்பு மதிப்பீடு மற்றும் உதவிக் குழுக்களை ஜப்பான் இலங்கைக்கு அனுப்பி வைத்தமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது தனது நன்றியைத் தெரிவித்தார்.

சேதமடைந்த வீதிகளை நவீனமயமாக்கவும், தொடருந்துப் போக்குவரத்துப் பாதைகள் கட்டமைப்புகளைப் சீரமைக்கவும் ஜப்பானிய அரசின் நிபுணத்து அறிவையும், தொழில்நுட்ப ஒத்துழைப்புகளையும் படிமுறையாக இலங்கைக்குப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

உட்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டுள்ள பெரும் சேதங்கள், வாழ்வாதார இழப்பு, இடப்பெயர்வு மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்குக் காணப்படும் இடர்பாடுகள் உள்ளிட்ட இந்தப் பேரழிவின் விசாலம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தூதுவருக்கு விளக்கமளித்தார்.

பிரதான வைத்தியசாலைகளில் இன்னும் தண்ணீர் பற்றாக்குறை காணப்படுவதாகவும், பேரழிவுக்குப் பிறகு ஏற்படக்கூடிய தொற்றுநோய் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கு இது தடையாக அமையும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். எனவே இந்நேரத்தில் இலங்கைக்கு ஜப்பானின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், இந்த நெருக்கடியான நேரத்தில் மனிதாபிமான உதவிகளை துரிதமாக இலங்கைக்குப் பெற்றுத் தருமாறும் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

கிடைக்கும் அனைத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச உதவிகளும் பாகுபாடின்றி பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சென்றடைவதனை உறுதி செய்ய, வெளிப்படையான, பொறுப்புணர்வுள்ள மற்றும் அரசியல்மயமாக்கப்படாத பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தூதுவரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

# தொற்றுநோய்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்

வெள்ளம் குறையும் நிலைமையில் தொற்றுநோய்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள் என்று தேசிய இடர் உதவிச் சேவைகள் நிலையம் அறிவுறுத்தல்

வெள்ளம் குறையும் நிலைமையில் தொற்று நோய்கள் மற்றும் நோய்க்கிருமிகளால் நோய்கள் பரவுவதற்கான அதிக ஆபத்து குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு தேசிய இடர் உதவி சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இடர்த்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 50 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய இடர் உதவிச் சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க, நேற்று திங்கட்கிழமை முப்படை பாதுகாப்பு தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அவசரகால இடர் சூழ்நிலையில் கொள்வனவு நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளருக்கும் 50 மில்லியன் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், உலர் உணவுக்காக இதுவரை பணத்தை வங்கியில்வைப்பிலிடும்முறைக்கு மேலதிகமாகதேவைக்கேற்ப உலர் உணவுப் பொருட்களை பொதியாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் தமது பகுதிகளில் நிலவும் விசேட நிலைமைகளின்அடிப்படையில்பொருத்தமானகுழுவொன்றின் மூலம் முடிவுகளை எடுக்கத் தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக உலர் உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் பணம் 7 நாட்களுக்காக ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் என்றும், அதனை தேவைக்கேற்ப அதிகரிக்கலாம் என்றும், தனி நபருக்கு 2100 ரூபா, இரண்டு உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 4200 ரூபா மற்றும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 6300 ரூபா, நான்கு உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 8400 ரூபா மற்றும் ஐந்து அல்லது அதற்குமேற்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட குடும்பங்களுக்கு 10,500 ரூபா என்றவகையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெள்ளம் குறையும் நிலமையில் தொற்று நோய்கள் மற்றும் நோய்க் கிருமிகளால் நோய்கள் பரவுவதற்கான அதிக ஆபத்து குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொண்ட உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க, இது தொடர்பாக சுகாதாரத் துறை உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக வீடுகளை சேறு, மண் மற்றும் குப்பைகளிலிருந்துசுத்தம்செய்யவேண்டியிருப்பதால், இதற்காக சுற்றறிக்கை 1(2025) இன் பிரிவு 5(2) திருத்தப்பட்டுள்ளது என்றும், அதன்படி, இந்த இடர்த்தை எதிர்கொண்ட ஒவ்வொரு வீட்டிற்கும் அதன் சுகாதார நிலைமைகளை சீர்செய்யவும் அதை வசிக்கக் கூடிய வீடாக மாற்றவும் 10,000 ரூபா முன்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அதன்படி, வீட்டின் உரிமையாளரைப் பொருட்படுத்தாமல், இடர்த்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் உரிய முன்பணத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான சுற்றறிக்கையை பாதுகாப்பு செயலாளர் சம்பத் துய்யகொந்தா நேற்று வெளியிட்டதாகவும் ஜயதிஸ்ஸ முனசிங்க தெரிவித்தார்.

இடரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்பாடல் நடவடிக்கைகளைச் சீர்செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த நேரத்தில் உதவிப் பணியாளர்கள் மிகவும் கடினமாக உழைத்து வருவதால், பொதுமக்கள் தமது முழுமையான ஆதரவை அவர்களுக்கு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

# எலிக் காய்ச்சல் தொற்றிற்கு உடனடி சிகிச்சை அவசியம்

## சுகாதார அமைச்சு அறிவுரை

வெள்ள இடர்த்தால் பாதிக்கப்பட்ட மக்கள் எலிக்காய்ச்சல் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற உடனடியாக சிகிச்சைப் பெறுவது அவசியம். நோய் தீவிரமடையும் பட்சத்தில் நிச்சயம் உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சின் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நாட்டில் உள்ள பல இடங்களில் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகள் பதிவாகியுள்ளன. மேற்படி கோர இடர்ங்களில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தும், காணாமலும் போயுள்ளனர். பேரிடரில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இதனால் தமது உறவுகளையும்,உடைமைகளையும்இழந்துஆயிரக்கனக்கான மக்கள் நிர்கதியிகியுள்ளதுடன், பெரும் துரங்களுக்கு மத்தியில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கடும் வெள்ளத்தால் பதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்று நோய்கள் தீவிரமாக பரவக் கூடிய சாத்தியப்பாடுகள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட எலிக்காய்ச்சல் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற உடனடியாக சிகிச்சைப் பெறுவது அவசியம். நோய் தீவிரமடையும் பட்சத்தில் நிச்சயம் உயிரிழப்புஏற்படும்அபாயம்உள்ளது. ஆகையால்பொதுமக்கள் நோய் தொடர்பில் விழிப்புணர்வோடு செயற்படுவது அவசியம்.

நாடு முழுவதும் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களிடம், நோய் தடுப்பு சிகிச்சைகள் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. ஆகையால் மக்கள் உரிய அதிகாரிகளைத் தொடர்புக் கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொற்றுநோய் பிரிவினரின் ஆலோசனைக்கமைய நோய்தடுப்பு மருந்துகளை பாதிக்கப்பட்டோர் இருக்கும் இடங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் சிகிச்சைகளை பெறுவதன் மூலம் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

அத்தோடு வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் தமது குடிதண்ணீர் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. பல இடங்களில் நீர் நிலைகள் மாசடைந்து குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மாசடைந்த நீரை பருகுவதால் நோய் தொற்று ஏற்படக்கூடும். முடிந்தளவு தூய்மையான குடிநீரை பருகுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

# கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நாடாளுமன்றில் உடன் கூட்டுக

## எதிர்க் கட்சிப் பிரதம கொறடா வலியுறுத்து

நாடுதற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான நிலைமையை கருத்திற் கொண்டு மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு இந்த சபையை பயன்படுத்தி உரிய தீர்மானத்தை எடுக்கவேண்டும். தற்போதைய நிலையில் இருந்து மீள்வதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். ஆகவே கட்சித் தலைவர் கூட்டத்தை உடன் நடத்துங்கள் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவிய மோசமான இயற்கை இடரால் உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். தற்போதைய அவசர நிலை குறித்து எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துரையாடினோம். எமது தரப்பு யோசனைகளை உங்களுக்கு (சபாநாயகர்) முன்வைக்கவுள்ளோம்.

கடந்த கட்சித் தலைவர் கூட்டத்தில் இன்று (நேற்று) இரவு 12 மணிவரை குழுநிலைவிவாத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இரவு 12 மணிவரை விவாதத்தை நடத்தும்போது அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், நாடாளுமன்றப் பணிக்குழுவினாலும் கலந்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

நாடாளுமன்றத்தின் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு கட்சித் தலைவர் கூட்டத்தை நடத்த புதிய ஒழுங்குப் பத்திரத்தை தயாரிக்க வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதம் எதிர்க்கட்சிக்காகவே நடத்தப்படுகிறது.

நாடுதற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான நிலைமையை கருத்திற் கொண்டு மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு இந்த சபையை பயன்படுத்தி உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும். தற்போதைய நிலையில் இருந்து மீள்வதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் ஆகவே கட்சித் தலைவர் கூட்டத்தை உடன் நடத்துங்கள் - என்றார்.



# நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்திலிருந்து நேற்று வெளிநடப்புச் செய்தன. பேரிடர் நிலைமையைக் கருத்தில் கொண்டு எடுக்கவேண்டிய கொள்கை நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க ஆளும்தரப்பு வாய்ப்பளிக்கத் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டியே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அதனால் நேற்று நாடாளுமன்றத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில்உரையாற்றியஎதிர்க்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம், பாதகமான வானிலை மற்றும் சாத்தியமான பேரிடர்கள் குறித்து வானிலை ஆய்வுத் துறை எச்சரித்திருந்த போதிலும் ஆளும்தரப்பு அதனை எதிர்கொள்வதற்குத் தயாரான நிலையில் இருக்கவில்லை என்று குற்றங்சாட்டினார்.

எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், ஆளும்தரப்புக் கவனம் செலுத்தவோ அல்லது பேரிடரைத் தடுக்கவோ தேவையான நடவடிக்கைகளை எடுக்கவோ தவறிவிட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்குக்கூட எழுப்பப்படவில்லை என்றும், அப்படிச் செய்யப்பட்டிருந்தால் பேரிடர்களின் தாக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

'நாங்கள் இதை முன்கூட்டியே நாடாளுமன்றத்தில் விவாதித்திருந்தால், நவம்பர் 12 முதல் படிப்படியாக தண்ணீர் திறக்கப்பட்டிருந்தால், குறைந்தது 75% உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். இந்தப் பிரச்சினையை அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு எங்கள் கருத்துகளையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் விவாதித்திருக்கலாம். 2016ஆம் ஆண்டிலும் இந்தச் சூழ்நிலையை நாங்கள் எதிர்கொண்டிருந்தோம். அதனால் விவாதம் பயனுள்ளதாக இருந்திருக்கும்' என்று கபீர் ஹாஷிம் தெரிவித்தார். எனவே இப்போதாவது அது பற்றி விரிவாக விவாதிக்கவேண்டும் என்றார்.

ஆனால், நேற்றைய அமர்விற்கான அடுத்த நிகழ்ச்சி நிரலுக்கு சபாநாயகர் சென்றபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் அரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், ரெலோ ஆகிய கட்சிகள் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தன. நாடாளுமன்றத்தில் நேரத்தை வீணடிப்பதற்குப் பதிலாக துன்பத்தில் உள்ளவர்களுக்கு உதவ முடியும் என்பதால் வெளியேறுகின்றோம் என்று தெரிவித்துவிட்டு எதிர்க் கட்சியினர் புறப்பட்டனர்.

## ஆளும்தரப்பு மக்களை கொலை செய்துள்ளது

### சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

மத்திய மாகாணத்தில் எமது உறவுகள் கொல்லப்பட்டுள்ளார்கள். சில கிராமங்கள் மண்ணுக்குள் புதையுண்டுள்ளன. இது கொலை. தயார் நிலையில் இல்லாமல் ஆளும்தரப்பு மக்களை படுகொலை செய்துள்ளது. பேசுவதற்கு இடமளித்தால் உண்மை வெளிவரும் என்று ஆளும்தரப்பு அச்சமடைகிறது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சித் தலைவர் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சியினர் இன்று வெளிநடப்பு செய்கின்றனர் என்று அறிவித்துள்ளார்கள். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினராகிய நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம். வடக்கு கிழக்கு உட்பட ஒட்டுமொத்த பகுதிகளிலும் இலட்சக்கணக்கானோர் இடரால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இடரில் உயிரிழந்தவர்களின் உண்மையான எண்ணிக்கை இதுவரையில் வெளியிடப்படவில்லை. நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை மற்றும் இடர் உதவி பற்றி எதிர்க்கட்சியினர் அனைவரும் ஓரணியாக இருந்து பேசுவதற்குத் தீர்மானித்திருந்தோம்.

மக்கள் பிரதிநிதிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கொழும்புக்கு வந்து நாடாளுமன்ற அமர்வில் கலந்துக்கொண்டுள்ளார்கள். மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு எதிர்பார்த்துள்ளார்கள். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாகிய நாங்கள் எதிரணியாகச் செயற்படுகிறோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வசமுள்ளன. மத்திய ஆளும்தரப்பின் செயற்திட்டங்களை அமுல்படுத்த எமது உள்ளூராட்சிமன்றங்களும் பங்களிக்க வேண்டும்.

மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு மேலதிகமாக நேரம் ஒதுக்குமாறே கோரியிருந்தோம். அதற்கு ஆளும்தரப்பு இணங்கவில்லை. இரண்டு நாட்களுக்கு பின்னர் விவாதமில்லாமல் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தீர்மானித்திருந்தோம். அதற்கும் ஆளும்தரப்பு இணங்கவில்லை.

மத்திய மாகாணத்தில் எமது உறவுகள் கொல்லப்பட்டுள்ளார்கள். சில கிராமங்கள் மண்ணுக்குள் புதையுண்டுள்ளன. இது கொலை. தயார் நிலையில் இல்லாமல் ஆளும்தரப்பு மக்களை படுகொலை செய்துள்ளது. இன்றைய (நேற்று) அமர்வில் எதிர்க்கட்சிக்கு 2 மணித்தியாலம் ஒதுக்கப்பட்டால் எமது கட்சிக்கு 5 நிமிடங்களே கிடைக்கும். 8 உறுப்பினர்கள் உள்ளோம். எவ்வாறு எமது மக்கள் பிரச்சினை பற்றிப் பேசுவது.

பேசுவதற்கு இடமளித்தால் ஆளும்தரப்பின் போலித் தன்மை வெளிப்படும் என்று ஆளும் தரப்பு அச்சமடைகிறது. ஆகவே ஆளும்தரப்பின் பொறுப்பற்ற செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்கிறோம் - என்றார்.

# அரசியல் இலாபத்தை அடைவதற்காக இடர் நிலையைப் பயன்படுத்தக்கூடாது

## அமைச்சர் பிமல் எதிர்க் கட்சிகளிடம் கோரிக்கை

வரலாற்றில் இடம்பெற்ற பேரிடர்களின்போது கட்சி பேதமின்றி செயற்பட்டுள்ளோம். கடினமான நிபந்தனைகளை செயற்படுத்தும் அனுபவமும் எங்களுக்கு உள்ளது. தற்போதைய இக்கட்டான நிலையை அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தக் கூடாது. எதிர்க்கட்சியினருக்கு மீண்டும் அரசுத் தலைவரைச் சந்திக்க வேண்டுமாயின் அதற்கான கோரிக்கையை விடுக்கவும் தயாராக இருக்கின்றோம் என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமர்வின் போது இயற்கை இடர்ங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்காமை தொடர்பாக எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து எழுந்த சர்ச்சையின் போது உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு பேரிடரிற்கு முகம்கொடுத்துள்ள இவ்வேளையில் நாடென்ற ரீதியில் சகல பேதங்களையும் புறம்தள்ளி மீண்டெழும் பலம் எமக்கு உள்ளது. எமக்கு பூச்சியத்தில் இருந்து தொடங்க வேண்டுமாயின் பூச்சியத்தில் இருந்து ஆரம்பித்து இப்போதுள்ளதை விடவும் சிறந்த நாட்டை உருவாக்க முடியும் என்பதனை அரசுத் தலைவரும் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியென்ற வகையில் நாங்கள் 1977 சூறாவளி தொடக்கம் கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் இதுபோன்ற இடர்களின்போது கட்சி பேதமின்றிச் செயற்பட்டுள்ளோம். எதனையும் அரசியல் லாபத்திற்காக பயன்படுத்தாத கலாச்சாரமும் உள்ளது. இடர் நிலைமைகளின்போது வழங்கும் ஒத்துழைப்புகளுக்காகப் பொதுமக்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோன்று இடர் நிலை ஏற்பட்டபோதே அரசுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துக் கலந்துரையாடினார். நவம்பர் 25 இடர் முகாமைத்துவ குழுவும் கூட்டப்பட்டது. பிரதேச ஒருங்கிணைப்பு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவையும் கூட்டியிருந்தார். அத்துடன் தேசிய இடர் முகாமைத்துவ குழுவும் கூட்டப்பட்டது. இதேவேளை எதிர்க்கட்சிகளின் கட்சித் தலைவர்களுடனும் அரசுத் தலைவர் கலந்துரையாடினார். இதன்போது அவசரகார சட்டத்தை அமுல்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன்படி அவசாரகால சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவத்திற்காக மட்டுமே அது பயன்படுத்தப்படும் என்று தெரவிக்கப்பட்டுள்ளது.

இப்போது வாழ்க்கையைத் தொடங்க முடியும். முழுநாடும் சிகப்பு நிறத்தில் இருந்தாலும் சில பிரதேசங்களில் பாதிப்புகள் கிடையாது. நாங்கள் வாழ்க்கையைத் தொடங்குவோம். வீதிகளை அமைக்கத் தொடங்குவோம். நீர்வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று மத்திய மாகாணத்தில் கொத்மலையில் சிக்கியிருந்தவர்களை விமானங்கள் மூலம் மீட்டுள்ளோம். தவலந்தன்னவுக்கு இராணுவத்தினர் நடந்துசென்று அங்கு முகாமிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பதுளை, கண்டி போன்ற மாவட்டங்களிலும் புத்தளம்முதல்முந்தல்வரையிலும்தொலைத்தொடர்பு தொடர்பான பிரச்சினை உள்ளது. மீட்கச் சென்ற விமானப்படை வீரர் ஒருவரும், கடற்படையை சேர்ந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர். நாயாறு பாலம் உடைந்துள்ளது. பாலத்தை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நெருப்பு இருக்கும் நேரத்திலேயே நீர் வீசி அதனை அணைக்கவேண்டும். தீயில்லாத நேரத்தில் நீரை வீசிப் பயனில்லை. இது நாட்டின் பிரச்சினையே. இது ஆளும்தரப்பின் பிரச்சினை அல்ல. முன்னரே தகவல்கள் கிடைத்ததா? தயாராகினோமா? என்பது தொடர்பில் பின்னர் கதைப்போம். பிரிந்திருந்து சத்தமிட்டுக்கொண்டிருக்க இது நேரமில்லை.

எதிர்க்கட்சியினருக்கு மீண்டும் அரசுத் தலைவரைச் சந்திக்க வேண்டுமாயின் அதற்கான கோரிக்கையை விடுக்கவும் தயாராக இருக்கின்றோம். இந்த இடரின்போது எவரையும் கைவிடாது அனைவரின் யோசனைகள் மற்றும் உதவிகளையும் பெற்றே நாங்கள் இதனைத் தீர்க்க முடியும். நாங்கள் நிச்சயமாக இதற்கு முகம்கொடுத்து மக்களை இதில் இருந்து மீட்க நடவடிக்கை எடுப்போம் - என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2025இல் வெளியிடப்பெற்றது